Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம 10

# ஈழநாடு

EELA NADU

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

பெங்களூர்–2.

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ சித்திரை 16 ஆம் நாள் துல்கஃதா 12 (28-4-61) வெள்ளிக்கிழமை இதழ் 64

# வங்கி வேலை ஆரம்பம்

## தற்காலிகமாக நேற்று வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

கொழும்பு, வெள்ளி

"வங்கி ஊழியர்களின் 23 நாள் வேலைநிறுத்தம் நேற்று தற்காலிகமாகக் கைவிடப்பட்டது. பிற்பகல் 1 மணிக்கு அனைவரும் வேலைக்குத் திரும்பினர். இதைத் தொடர்ந்து வங்கிகளில் அலுவல்கள் ஆரம்பமாயிற்று" என்று பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்கா விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

வங்கி வேலைநிறுத்தம் சம்பந்தமாக நடைபெற்ற கூட்டத்தில் 33 பேரில் 30 பேர் வேலைக்குத் திரும்ப வேண்டுமென ஆதரித்துவாக்களித்ததாயும் அறிவிக்கப்பட்டது.

## 'ஜவஹரை கொடையாக நாட்டுக்களித்த மோதிலால்'

—சென்னை நீதிபதி

சென்னை, ஏப்ரல் 27

"ஸ்ரீமோதிலால் நேரு, மனிதரிடையே மன்னராக விளங்கினர். வழக்கறிஞர்களுக்கிடையேயும் தேசபக்தர்களுக்கிடையேயும் கூட ஒரு மன்னரைப் போல் விளங்கினர். வள்ளல்களுக்கிடையேயும் அவர் மன்னராக விளங்கினர்." என சென்னைப் பிரதம நீதிபதி திரு. பி. வி. ராஜமன்னர், சென்னை வழக்கறிஞர் சங்கத்தின் சார்பாக உயர் நீதிமன்றத்தில், மோதிலால் நேருவின் உருவப்படம் ஒன்றைத் திறந்து வைத்துப் பேசும்போது குறிப்பிட்டார்.

"மோதிலால் நேரு தேசத்திற்களித்த கொடைகளிடையே மிகவும் பெரிய கொடை, தன் புதல்வர் ஸ்ரீஜவஹர்லால் நேருவை அளித்தது தான்" என்றும் திரு. ராஜமன்னர் கூறினர்.

"புகழ்பெற்ற இத்தத் தந்தையையும், தனயனையும் போன்ற ஒப்பற்ற மாணிக்கங்கள் நாட்டில் இன்னும் பலர் தோன்ற வேண்டுமென விரும்புகிறேன்" என்றும் நீதிபதி தொடர்ந்து கூறினர்.

## அபிவிருத்தித் திட்டம்

கொழும்பு, வியாழன்

ஆறுகளைப் பலநோக்கு அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்திட்டங்கள் மகாவலி, வெலவ, நில்வல கங்கா, ஜின் கங்கா, மகா ஓயா, மீ ஓயா, தெதுரு ஓயா, கால ஓயா, யன் ஓயா, கிறின்டி ஓயா, மாணிக்க கங்கா, களனி கலு கங்கா, மல்வத்து ஓயா ஆகிய ஆற்றுப் பள்ளத்தாக்குகளை விருத்தி செய்யப் பயன் படுத்தப்படும்.

இம்மாத முற்பகுதியில் மகாவலிகங்கை அபிவிருத்தித்திட்ட அறிக்கை அமெரிக்க திட்டக் குழுவால் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

மல்வத்து ஓயா திட்ட அறிக்கையொன்று ஏற்கெனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## ஜனத்தொகை அதிகரிப்பு

### ஒருகோடியை எட்டிவிட்டது

கொழும்பு, வியாழன்

இலங்கையின் ஜனத்தொகை ஒரு கோடியாகியுள்ளது. 1959-ம் ஆண்டு ஜுன் மாதத்தில் 9,625,000 ஆக இருந்த இலங்கையின் ஜனத்தொகை சென்ற மாத இறுதியில் கணக்கெடுக்கையில் ஒருகோடியாகியுள்ளதாகத் தெரிய வந்தது.

இலங்கையின் ஜனத்தொகை 2·5 வீதம் அதிகரித்து வந்துள்ளது.

## இன்று லாவோஸ் கமிஷன் கூட்டம்

புதுடில்லி, ஏப்ரல் 27

நாளை புதுடில்லியில் லாவோஸ் சர்வதேசக் கமிஷன் கூடுகிறது. இங்கிலாந்து செல்வதற்காக ஏற்கனவே கனடா, போலந்து பிரதிநிதிகள் வந்துள்ளனர்.

## 'விசா' முறையை ஒழிக்க யோசனை

புதுடில்லி, ஏப். 27

இயன்ற அளவில் 'விஸா' முறையை ஒழித்து விடுமாறு அங்கத்துவ நாடுகளுக்கு யோசனை கூறுவதென்று புதுடில்லியில் நடைபெற்றுவரும் 'ஈகபே' யின் உல்லாசப் பிரயாணம் சம்பந்தமான மகாநாடு முடிவு செய்துள்ளது.

## மந்திரி சரத் இன்று லண்டன் செல்கிறார்

கொழும்பு, ஏப்ரல் 28

கைத்தொழில் தேசியசேவை மந்திரி செனட்டர் சரத் விஜயசிங்கா, இன்று விமான மூலம் லண்டன் செல்கின்றார்,

சுகயீனம் காரணமாக சிகிச்சைபெறச் செல்லும் இவருடன், பல்கலைக்கழக மருத்துவ பிரிவைச்சேர்ந்த டாக்டர் வி. எஸ். மகேசனின் பாரியாரும் செல்கின்றார்.

திரு. விஜயசிங்கா கடந்த ஒரு மாதகாலமாக சுகயீனமாக இருந்ததும், இதற்காக லண்டனிலிருந்து இலங்கை அரசாங்கம் ஒரு விசேஷ வைத்தியரை அழைப்பித்து இருந்ததும் வாசக நேயர்களுக்குநினைவிருக்கலாம்.

## "உள்நாட்டுத் துணிகளையே மக்கள் அணியவேண்டும்"

### வியாங்கொடை நெசவாலை திறப்பு விழாவில் பிரதமர் பேச்சு

கொழும்பு, புதன்

வியாங்கொடை, வியாழன்

"காலஞ் சென்ற பிரதமர் உள்நாட்டு நெசவுத் துணிகளை அணிவதில் பெரும் சிரத்தை காட்டினர். மக்களும் உள்நாட்டுத் துணிகளை அணிய முன்வர வேண்டும்" எனப் பிரதம மந்திரி ஸ்ரீமதி பண்டாரநாயக்கா, இன்று வியாங்கொடையில் கைத்தறி நெசவாலை ஒன்றைத் திறந்து வைத்துப் பேசும்போது கூறினர்.

இன்று மாலை 5 மணிக்கு ஒரு மின்சாரப் பொத்தானை அமுக்கி இத்தொழிற்சாலையை அவர் ஆரம்பித்து வைத்தார்.

"நாட்டின் நூல் தேவையை இந்த நூல் ஆலை முக்கால் பங்கு பூர்த்தி செய்யும்" எனப் பிரதமர் அப்போது கூறினர்.

மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"1925-ம் ஆண்டு முதலே காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கா இவ்விஷயத்தில் சிரத்தைகொண்டிருந்தார். இந்நாட்டிற்கு 1 கோடியே 40 லட்சம் யார் துணி தேவைப்படுகிறது. ஆனல் 30 லட்சம் யார் மட்டுமே இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது.

1963-ம் ஆண்டில் இத் தொழிற்சாலை 30 லட்சம் யார் துணியை உற்பத்தி செய்யும்.

1966-ல் நாட்டின் முழுத் தேவையையும் உற்பத்தி செய்யும். சீனர்களின் உதவியுடன் மற்றோர் ஆலையை ஆரம்பிக்கவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

## ரா. பி. மறைவுக்கு அண்ணமலையில் அனுதாபம்

அண்ணமலைநகர், ஏப்ரல் 27

காலஞ்சென்ற தமிழ்ப்பேரறிஞர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளையின் மறைவை முன்னிட்டு அண்ணமலைப் பல்கலைக்கழக மாணவர்களும், ஆசிரியர்களும் அனுதாபத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினர்கள். பல பேரறிஞர்கள் டாக்டர் ரா. பி. யைப் பாராட்டிப் பேசினர். நாடும், பல்கலைக்கழகங்களும், குறிப்பாக அண்ணமலைப் பல்கலைக்கழகமும் அவரது மரணத்தினுல் ஈடுசெய்ய முடியாத நஷ்டம் அடைந்து விட்டது என பலர் பேசும் போது கூறினர்.

## யாழ்ப்பாண சம்பவத்தில் ஆறு பேர் கைதாயினர்

### வடக்கு, கிழக்கு மாகாணம் அமைதி

கொழும்பு, வியாழன்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிர்வாகம் சீராக நடைபெற்றுவருகிறது. பொதுவாக அமைதியான நிலை அங்கு ஏற்பட்டுள்ளது.

**யாழ்ப்பாணத்தில் 6 பேர் காவல்**

யாழ்ப்பாணத்தில் கல்வீச்சு சம்பவம் ஒன்று நடைபெற்றதின் காரணமாய் சந்தேகத்தின் பேரில் 6 பேர் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

திருக்கோணமலை, வவனியா, மன்னர், மட்டக்களப்பு, ஆகிய இடங்களில் அசம்பாவிதம் எதுவுமில்லை. மட்டக்களப்பில் மற்ருெருவர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கிருர். வேலைநிறுத்தம் செய்த தோட்டத் தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்பிவிட்டனர்.

நியூயோர்க், ஏப்ரல் 27

ஐ. நா பொதுக் காரியதரிசி திரு. ஹமர்ஷீல்ட் தன்காங்கோ ஆலோசனைக் கமிட்டியுடன் இன்று கலந்தாலோசனை செய்தார்.

## டாக்டர் ராய்க்கு பாரத ரத்ன விருது

புதுடில்லி, ஏப்ரல் 27

நேற்றுமாலை புதுடில்லி ராஷ்டிரபதி பவனத்தில் குடியரசு தினத்தன்று அறிவிக்கப்பட்ட கௌரவ விருதுகள் வழங்கப்பட்டன.

மேற்கு வங்காள முதன் மந்திரி டாக்டர் பி. ஸி. ராய், திரு. புருஷோத்தமதாஸ் தாண்டன் ஆகியோருக்கு "பாரத ரத்ன" விருதுகள் வழங்கப்பட்டன.

13 பேருக்கு "பத்மபூஷன்" விருதுகளும், 21 பேருக்கு "பத்மஸ்ரீ" விருதுகளும் வழங்கப்பட்டன. இதில் நால்வர் பெண்கள்.

## ஷோம்பே காவலில் இருக்கிறர்

லண்டன், ஏப்ரல் 27

கடாங்கா ஜனதிபதி மோய்ஸி ஷோம்பே, இன்னும் காவலில் வைக்கப்பட்டிருப்பதாய் ஒருசெய்தி கூறுகிறது.

## லிகிதர் சங்க தலைமைக் காரியாலயம்

கொழும்பு, வெள்ளி

அரசாங்க லிகிதர் சேவை சங்கத்தின் புதிய தலைமைக் காரியாலயக் கட்டிடத்தை பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயகா இன்று திறந்து வைப்பார் பார்ஸன்ஸ் ரஸ்தாவில இக்கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது.

## ரஷ்யா, சீன அங்கீகாரம்

லண்டன், ஏப்ரல் 27

புதிதாகச் சுதந்திரமடைந்த நாடான ஸீராலியோன், காமன்வெல்த்தில் சேர்ந்ததைப் பல வட்டாரங்கள் வரவேற்றன. ரஷ்யாவும், சீனவும் ஸீராலியோன் அரசாங்கத்தை அங்கீகரித்துள்ளன என்றும் அமெரிக்கா புதியநாட்டைப் பாராட்டியுள்ளதென்றும் அறிவிக்கப்பட்டது.

## மணிவாக்கு

தியாகம் செய்வதனல் ஆனந்தம் பிறக்காவிட்டால் அந்தத் தியாகம் தியாகமாகாது. தான் செய்யும் தியாகத்துக்காகத் தன்னிடம் எல்லோரும் அனுதாபம் காட்ட வேண்டுமென்று எதிர்பார்ப்பவனை மனித வர்க்கம் கணிக்கமாட்டாது.

— காந்தியடிகள்


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு சித்திரை மீ 16 உ (28-4-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## ஜெனரல் டி'கால் வெற்றி

அல்ஜீரிய புரட்சியை வெற்றிகரமாக பிரெஞ்சு ஜனதிபதி ஜெனரல் டி'கால் அடக்கிவிட்டதால், பிரெஞ்சு அரசாங்கம் பலப்பட்டுள்ளதுடன், அல்ஜீரிய மக்களின் சுதந்திரப் பிரச்சினையும் சுமுகமாகத் தீர வழி பிறந்துள்ளது.

இராணுவத் தலைவர்களில் சிலர் சேர்ந்து கொண்டு சதி செய்து, அல்ஜீரிய ஆட்சியைக் கைப்பற்றுவதுடன், பிரான்ஸ் மீதும் படையெடுத்து, அங்கும் தங்கள் ஆட்சியை ஏற்படுத்தத் திட்டம் போட்டனர். ஆனல் பிரெஞ்சு மக்கள் இராணுவ ஆதிக்கத்தை விரும்பவில்லை. ஒரு கோடி தொழிலாளர், தங்கள் ஜனதிபதியை ஆதரிப்பதற்கு அடையாளமாக ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்தனர். இராணுவத்திலுள்ள சிப்பாய்களும் தேசாபிமானத்துடன் நடந்து, தேசத் தலைவருக்கு விசுவாசமாக இருந்தனர். அல்ஜீரியாவிலிருந்த விமானப் படையினரில் பலர், விமானங்களுடனே பிரான்ஸுக்குத் தப்பி வந்துவிட்டனர். இதே சமயம் ஜெனரல் டி'காலும் மிக உறுதியாக நின்று, எவ்வித உதவியும் அல்ஜீரிய இராணுவப் புரட்சியாளருக்குக் கிடைக்காமல் தடுத்துவிட்டார். இக்காரணங்களால் பிரான்ஸுக்குஏற்பட்டிருந்த பெரிய நெருக்கடியும் வெற்றிகரமாக நீங்கியது.

இந்தச் சம்பவம், அல்ஜீரியாவில் குடியேறியுள்ள பிரெஞ்சு சுயநலமிகளுக்குப் பெரிய எச்சரிக்கையாவதுடன், அல்ஜீரியப் பொது மக்களுக்கு ஜெனரல் டி'காலின்பால் அதிக நம்பிக்கை ஏற்படவும் அவர்களது சுதந்திரக் கோரிக்கை சீக்கிரத்தில் நிறைவேறவும் உதவ வேண்டும். அல்ஜீரியப் புரட்சிபற்றி ஏற்கெனவே நாம் இப்பந்திகளில் எழுதுகையில், இப்புரட்சியின் பயனக, அல்ஜீரிய மக்களின் கட்சி பலப்படுமென்று குறிப்பிட்டிருந்தோம். அதே போல், அவர்களுக்குச் சுயநிர்ணய உரிமையை அளிக்க முன்வந்த ஜெனரல் டி'கால் இனி காலம் தாழ்த்தாமல், அல்ஜீரியத் தலைவரான பெர்ஹாட் அப்பாஸை அழைத்துப் பேசி, அல்ஜீரியப் பிரச்சினையைத் தீர்க்க வெற்றிகரமாக முற்படுவாரென்றே கொள்ளலாம்.

## விஸா தடைகள்

புதுடில்லியில் "எஸ்கபே" ஸ்தாபனத்தின் ஆதரவில் கூடிய உல்லாசயாத்திரை அபிவிருத்தி மகாநாட்டில், விஸா தடைகளைக் கூடுமானவரை ஒழித்துவிட வேண்டுமென்று பலநாடுகளுக்கும் ஒரு நல்லயோசனை கூறி தீர்மானமொன்று நிறைவேற்றியுள்ளது. இத்தீர்மானத்தின்படி பல ஆசிய நாடுகளும் நடந்தால், யாத்திரிகர் போக்குவரத்து அதிகரித்து, வருவாய் அதிகரிப்பதுடன், பலநாடுகளுக்கும் நல்லுறவும் ஒத்துழைப்பும் பெருகுவதாக இருக்கும்.

யாத்திரை சுதந்திரம் மனித உரிமைகளில் முக்கியமானது. உலகில் எங்கு வேண்டுமானலும் யாத்திரை செய்ய ஒவ்வொரு மனிதருக்கும் உரிமை இருக்கவேண்டும். ஆனல் துரதிருஷ்டவசமாக பல நாடுகளிலே, அதிலும் புதிதாக சுதந்திரம் பெற்ற ஆசிய நாடுகளிலே, விஸா தடைகள் அதிகமாக ஏற்பட்டு அண்டை நாடுகளுக்கும் மக்கள் செல்ல முடியாதபடி இருக்கின்றது. இந்நிலையில் ஆசிய, ஆபிரிக்க உறவைப்பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை. விஸா முதலிய தடைகளைத் தளர்த்தி யாத்திரை சுதந்திரத்தை, ஆசியா நாடுகள் தங்களுக்குள் பரஸ்பரம் ஏற்படுத்திக் கொள்வது, ஆசிய ஒற்றுமையையும், பொருளாதாரத்தையும் பலப்படுத்த உதவும்.

# கடாங்கா ஜனதிபதி ஷோம்பே கைதாகி விடுதலை

## மட்டாடி துறைமுகத்தை ஐ. நா. விடம் ஒப்படைக்க முடிவு

லியப்போல்ட்வில்லி, ஏப் 27

காங்கோவில் மட்டாடி துறை முகத்தை ஐ. நா. படைகளிடம் ஒப்படைக்க லியப்போல்ட்வில்லி அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளது. ஐ. நா. படையைச் சேர்ந்த சூடான் துருப்புக்களுக்கும்—மோபுத்துவின் துருப்புக்களுக்கும் இடையில் மட்டாடியில் ஏற்பட்ட கைகலப்பு காரணமாக மட்டாடியை விட்டு ஐ. நா. படைகள் வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது.

மட்டாடியை மீண்டும் ஐ. நா. விடம் ஒப்படைப்பதென்ற முடிவை காங்கோ வெளிவிவகார மந்திரி பொம்பகோ தெரிவித்தார்.

### ஷோம்பே கைதாகி விடுதலை

ஈக்குவேட்டரில் நடைபெற்ற காங்கோலிய தலைவர்களின் மகாநாட்டில் கடாங்கா ஜனதிபதி ஷோம்பேக்கும் காங்கோ (லியப்போல்ட்வில்லி அரசாங்கம்) ஜனதிபதி கஸவுபுவுக்கும் தகராறு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து மகாநாட்டை விட்டு ஷோம்பே வெளியேறினர். ஷோம்பே கடாங்காவின் தலைநகரான எலிஸபெத்வில்லிக்கு விமானத்தில் புறப்படவிருந்த சமயம் காங்கோலியத் துருப்புக்களால் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

ஷோம்பேயை விடுதலை செய்யும்படியும் விடுதலை செய்யா விட்டால் லியப்போல்ட்வில்லி மீது படையெடுக்கப் போவதாகவும் கடாங்காவின் படைத் தளபதி கஸவுபுவுக்கு எச்சரிக்கை விடுத்தார். கடாங்கா படைகளை எதற்கும் தயாராக இருக்குமாறும் கடாங்கா மந்திரிசபை உஷார்படுத்தியது.

இதைத் தொடர்ந்து கடாங்கா தலைவர் ஷோம்பே விடுதலை செய்யப்பட்டார். திரு ஷோம்பே பின்னர் விமானத்தில் எலிஸபெத்வில்லிக்குப் போய்ச்சேர்ந்தார்.

கடாங்காவில்தான் லுமும்பா சித்திரவதை செய்யப்பட்டதும் கொலை செய்யப்பட்டதும் என்பது குறிப்பிடத்தக்கது.

## காஷ்மீர் முன்னுள் மன்னர் காலமானர்

பம்பாய், ஏப்ரல் 26

ஜம்மு காஷ்மீரின் முன்னுள் மன்னர் இன்று பம்பாயில் காலமானர். ஜம்மு காஷ்மீரின் தற்போதைய ராஜ் பிரமுக் யுவராஜ் கரன்சிங்கின் தந்தையார் இவர். 1948-ம் ஆண்டில் இந்தியாவுக்கு வந்த இவர் பம்பாயிலேயே தங்கி விட்டார். காஷ்மீருக்குத் திரும்பிச் செல்லவில்லை.

## "எழுத்தறிவுமட்டும் உண்மைக் கல்வியல்ல"

—நேருஜி

புதுடில்லி, ஏப். 27

பாரத முதியோர் சங்கக்கட்டிடத்தை பிரதமர் நேரு நேற்று புதுடில்லியில் திறந்துவைத்தார்.

"எழுத்தறிவுமட்டும் உண்மைக் கல்வியாகி விடாது" என்று திரு. நேரு அங்கு பேசுகையில் குறிப்பிட்டார். அறநெறியைப்பற்றி நமது நாட்டில் அதிகம் பேசப்படுகிறது. உண்மையில் அறநெறியைப்பற்றி அறிந்தவர்களும் அதன்படி ஒழுகுபவர்களும் மிகக்குறைவு என்று திரு. நேரு கூறினர்.

## கோவா தேசியவாதிகள் தாக்குதல்

### எல்லைக் காவற்காரர் மாண்டனர்

புதுடில்லி, ஏப். 27

கோவாவில் எல்லைக் காவல் நிலையம் ஒன்றை தேசியவாதிகள் சிலர் நேற்றுத் தாக்கியதில் இரண்டு காவற்காரர் கொல்லப்பட்டனர். மற்றுமிருவர் படுகாயமடைந்தனர். தாக்கியவர்கள் தப்பி ஓடிவிட்டதாக போர்த்துக்கல் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

## கியூபாமீது மீண்டும் தாக்குதல்?

மாஸ்கோ, ஏப். 27

கியூபாமீது மீண்டும் தாக்குதல் நடத்த உதவியளிக்குமாறு சில்லி அரசாங்கத்தை அமெரிக்கா கேட்டுள்ளதாக மாஸ்கோ வானெலி இன்று தனது செய்தி அறிக்கையில் தெரிவித்தது.

கியூபாமீது புதிய தாக்குதல் நடத்தலத்தின் அமெரிக்க நாடுகளை உதவி புரியுமாறு அமெரிக்கா கேட்டிருப்பதாகவும் மாஸ்கோ ரேடியோ தனது செய்தி அறிக்கையில் தெரிவித்தது.

கியூபாவின் காஸ்ட்ரோ அரசாங்கத்தை வீழ்த்த அமெரிக்க ஜனதிபதி கென்னடி எடுக்கும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு அளிக்கத் தயாரென்று அமெரிக்க லீஜன் தலைவர் திரு. வில்லியம்பேக் தெரிவித்துள்ளதாகவும் மாஸ்கோ ரேடியோ தெரிவித்தது.

## எட்டு லட்சம் தோட்டத் தொழிலாளர் போனஸ் கிடைக்கும்

புதுடில்லி, ஏப். 27

அஸாம், வங்காளம் ஆகிய மாகாணங்களிலுள்ள தேயிலைத் தோட்டங்களின் தொழிலாளர்களுக்கு 1959-1961-ம் வருடங்களுக்கான போனஸ் வழங்குவதற்கான ஒப்பந்தம் ஒன்று முதலாளி-தொழிலாளிகளுக்கிடையே நேற்று கல்கத்தாவில் கைச்சாத்தானது. இந்த ஒப்பந்தத்தின்படி எட்டு லட்சம் தோட்டத் தொழிலாளர்களுக்குப் போனஸ் கிடைக்கும்.

## முளாய் பிள்ளையார் கோவில்

முளாய் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் 20-4-61 வியாழக்கிழமை தொடக்கம் நடைபெறுகின்றது. 29-4-61ல் விசாகபூரணை அன்று தேர்த் திருவிழா நடைபெறும். அவசரகால நிலைமையைமுன்னிட்டு பகலிலேயே இராத் திருவிழாவும் நடைபெற்றுவருகின்றது. பகல் 12 மணிக்குள் பகல்திருவிழாவும், மாலை 5 மணிக்குள் இராத்திருவிழாவும் நடைபெற்றுவிடுகின்றன. சித்திரைக்கஞ்சித்தினத்தன்று தீர்த்தத்திருவிழா நடைபெறும்.

## அந்நிய மூலதனம்பற்றி மொரார்ஜி தேசாய்

புதுடில்லி, ஏப். 27

பாரத நாட்டிலுள்ள கம்பனிகளில் அந்நியர் முதலீடு செய்வது நாட்டு நலனுக்கு உகந்ததாக இருந்தால் அவ்வித முதலீடுகளை அரசாங்கம் அனுமதிக்கும் என்று இந்திய நிதிமந்திரி திரு. மொரார்ஜி தேசாய் நேற்று ராஜ்ய சபாவில் தெரிவித்தார்.

நாட்டின் செல்வம் ஒரு சிலரிடம் வந்து குவிவதாகக் கூறுவது உண்மையல்ல என்று நிதி மந்திரி கூறினர்.

## முகாம்களை மூடிவிட முடிவு

புதுடில்லி, ஏப். 27

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இடம் பெயர்ந்து வந்த அகதிகளுக்குப் புனர்வாழ்வளிக்கும் மேற்கு வங்காளத்திலுள்ள முகாம்களை வருகிற நவம்பர் மாதம் மூடிவிடுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

# அல்ஜீரியாவில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்

## பிரஞ்சு பிரதமர் அறிக்கை

பாரிஸ் ஏப். 27

"பிரான்ஸ் சோதனைக்காலத்தைத் தாண்டிவிட்டது. என்றுலும் இனிமேலும் எதுவும் நடக்காது என்று எண்ணிவிட முடியாது" என்று பிரஞ்சு பிரதமர் டெப்ரே, அல்ஜீரியக் கலகம் அடக்கப்பட்டபின் 'டெலிவிஷனில்' தோன்றி நிகழ்த்திய உரையில் குறிப்பிட்டார்.

அல்ஜீரியாச் சம்பவம் போன்று இனிமேல் தொல்லைகள் ஏற்படாதவாறு தடுப்பதற்கும் நாட்டின் நலனையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்கும் அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியுள்ளது. "சட்டங்கள் கடுமையாக்கப்படும். சலுகைகள் காட்டப்படமாட்டாது" என்று பிரதமர் டெப்ரே கூறினர்.

அல்ஜீரிய கலகம் அடக்கப்பட்டபின் அடுத்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி பிரஞ்சு ஜனதிபதி டிகால் தமதுமந்திரிசபையைக் கூட்டி நீண்டநேரம் ஆலோசனை நடத்தினர்,

அல்ஜீரியக் கலகத்தை அடக்கியதற்காக பிரஞ்சு ஜனதிபதி டிகாலை லண்டன், வாஷிங்டன் ஆகிய நகரங்களில் மக்களும் தலைவர்களும் பாராட்டினர்.

பிரான்சுடன் ஒரு சமாதான உடன்படிக்கை செய்துகொள்வதுபற்றி பெர்ஹட் அப்பாஸ் தலைமையிலுள்ள அல்ஜீரிய'பயிற்சி' அரசாங்கம் யோசனை செய்துவருவதாக ஒரு செய்தி கூறுகிறது.

## ஐயாறன் எழுதுவது

நேற்று காலை ஒரு வெள்ளைக்காரர் வந்தார். லண்டன் 'டெயிலி டெலி கிராப்" பத்திரிகையின் நிருபரிடம் அவர் யாழ்ப்பாணத்திலுள்ள நிலைமையை நேரில் அறிந்து தமது பத்திரிகைக்குத் தெரிவிக்கப் போவதாயும், அமெரிக்காவிலிருந்து 'ஒரு நிருபர் வந்துள்ளதாயும் தெரிவித்தார். உலகத்தின் கண்களும் காதுகாளும் இங்கு வந்து கவனிப்பதை அறிந்தேன்.

கொழும்பிலிருக்கையில் தாம் யாழ்ப்பாண நிலைமையைப் பற்றி என்னென்ன வதந்தி எல்லாமோ கேள்விப்பட்டதாயும் ஆனல் இங்கு வந்து பார்த்தால் எல்லாம் அமைதியாக இருப்பதாகவே தோன்றியதாயும், இராணுவ அதிகாரிவுள்ளிட்டு பலரையும் கண்டு பேசப்போவதாகவும் கூறினர்.

* * *

அவர் வந்தது காலை 9 மணிக்கு. வியர்வை கொட்டு கொட்டென்று கொட்டிவிட்டது. பாவம் யாழ்ப்பாணத்தில் இப்படித்தானு! என்று கவலையுடன் கேட்டார். இன்னும் இரண்டல்லது மூன்று நாட்கள் இங்கு இருக்கப் போவதாயும் தெரிவித்தார்.

அவர் பேசிக்கொண்டிருக்கையிலேயே வருணனும் வந்துவிட்டான். அவருடைய வியர்வையும் அடங்கி, உள்ளமும் குளிர்ந்தது.

* * *

இப்போது பெய்யும் மழை நல்லதா? கெட்டதா? என்று ஒரு நண்பரைக் கேட்டேன். சில மாமரங்கள் இப்போதுதான் பூத்துள்ளதாயும் மழையில் பூ எல்லாம் கொட்டி, காய்ப்பு இம்முறை குறைவாகலாமென்றும், ஏற்கெனவே பிஞ்சுவிட்ட மரங்களுக்குப் பரவாயில்லை என்றும் சொன்னர்.

கின்நொச்சியிலே நெல் அறுவடைக்கு இம்மழையால் ஓரளவு பாதகம் ஏற்படுமென்றும் கருதுகிருர்.

மழையால் சிலருக்கு நன்மை; சிலருக்குத் தீமை. வருணன் தான் என்ன செய்வான்!

* * *

இப்போது நாம் வசிக்கும் பூமியிலே ஜனத்தொகை அதிகரித்துக் கொண்டு போகும் வேகத்தைப் பார்த்தால், இனி வேறு கிரகங்களில்தான் தான் மக்கள் குடியேற வேண்டியிருக்கும் என்றும், அது ஒன்றுதான் வழி என்றும் பிரிட்டனிலே சுகாதார காங்கிரஸின் தலைவர் பேசியிருக்கிருர்.

அந்த கிரகங்களிலும் மனிதர்கள் அதிகமாக இருந்து, அவர்கள் நமது பூமிக்கு வந்து குடியேற திட்டமிட்டிருந்தால் என்ன செய்வது? அப்படி ஏற்படாதென்யார்தான் உத்தரவாதமளிக்கமுடியும்?

* * *

ஜனத்தொகை அதிகமாவதைப்பற்றி நாம் வீணுக விசாரப்படத் தேவையில்லை. ஆபிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா ரஷ்யா முதலிய நாடுகளில் ஜன நெருக்கம் மிகக் குறைவு. இடமோ அதிகமுள்ளது. ஆகவே ஜனங்கள் குறைவாகவுள்ள நாடுகளில் மக்கள் தாராளமாகக் குடியேறும்படி செய்வதுடஸ், நவீன விஞ்ஞான முறைகளால் உணவு உற்பத்தியை அதிகமாகப் பெருக்குவதின் மூலமும், இந்தப் பிரச்சினையை தீர்த்துக்கொள்ள நிச்சயம் இடமுண்டு.

ஆனல் சிலர் பெரிய பெரிய நாடுகளை ஆக்கிரமித்துக் கொண்டு, வேறு யாரும் அங்கு வரப்படாதென்று தடை போட்டுக் கொண்டிருக்கிருர்கள். உலகமெல்லாம் ஒரே குடும்பம். எந்த நாட்டுக்கும் யாரும் சென்று குடியேறி வசிக்கலாம் என்ற சுதந்திரத்தை மக்க

(4-ம் பக்கம் பாக்க)

# மேற்கு ஆபிரிக்காவில் மற்றொரு நாடு விடுதலை

## ஸிராலியோனில் சுதந்திரவிழா

பிரிடவுண், ஏப் 27 மேற்கு ஆபிரிக்காவின் மற்றொரு நாடான ஸியராலியோன் இன்று சுதந்திரமடைந்தது. சுமார் 150 வருடங்கள் பிரிட்டிஸ் ஆட்சியின் கீழிருந்த சியராலியோனின் சுதந்திரதின விழா இன்று அதன் தலைநகரான பிரீடவுணில் நடைபெறுகிறது. எலிஸபெத் மகாராணியின் சார்பில் கென்ட் கோமகன் இன்றைய வைபவத்தில் கலந்துகொண்டு சுதந்திரப்பிரகடனத்தை வாசித்தளித்தார்.

பிரிட்டனின் ஜூனியன் ஜாக் கொடி பிரிடவுனில் கடைசி முறையாக இறக்கப்பட்டு அதற்குப்பதிலாக சியராலியோனின் தேசீயக்கொடியான பச்சை. வெள்ளை, நீலம் ஆகிய வர்ணங்களைக்கொண்ட மூவர்ணக்கொடி பறக்க விடப்பட்டது.

ஸியாராலியோன் மேற்கு ஆபிரிக்க கடற்கரை ஓரத்தில் உள்ள ஓர் வளமிக்கநாடு. விஸ்தீரணம் 27,925 சதுரமைல். இலங்கையைவிட சற்று பெரிது. ஆனல் ஜனத்தொகை 20 லட்சம்தான். இரும்பு, தோல், அரிசி, தங்கம், வைரம் முதலியன கிடைக்கின்றன.

## யானைகளால் அறுவடை அழிவு

முள்ளியவளை, புதன்

முல்லைத்தீவுப் பகுதியின் பல்வேறு பிரிவுகளிலும், நெல் அறுவடை முடிவடையும் தறுவாயில் இருக்கிறது. இதற்கிடையில், வயல்களிலுள்ள சூடுகளை, யானைகள் அழிப்பதால், கமக்காரர் கவலை அடைந்துள்ளனர்.

சூடு அடிப்பதற்கு வேண்டிய ஆட்களும், இயந்திரக்கலப்பைகளும் போதிய அளவுகிடையாமையே இந்த அவல நிலைக்குக் காரணம் எனச் சொல்லப்படுகிறது.

---

அளவை, ஏப். 27

கடந்த இரவு, கெப்பிற்றிவளனவிலுள்ள அரசாங்க நெசவு ஆலையிலிருந்து சுமார் 30 சாறம்களுக்கான துணிகள் களவாடப்பட்டுள்ளது,

## காணிக்கச்சேரி பின்போடப்பட்டது

முள்ளியவளை, திங்கள்

தண்ணீர்முறிப்புப் பகுதியில் விவசாயிகளுக்குக் காணிகொடுப்பதற்காக, நெடுங்கேணியில் இன்று நடைபெறவிருந்த காணிக்கச்சேரி பின்போடப்பட்டுள்ளது.

## அழைப்பிதழை திருப்பி அனுப்பினர்

கொழும்பு, வியாழன்

ரத்தோட்டை எம். பி திரு சி. முனவீராவுக்கு அனுப்பப்பட்ட அழைப்பிதழை அவர் திருப்பி அனுப்பியுள்ளார்.

வியாங்கொடை நெசவாலையின் திறப்பு விழாவுக்கு வருமாறு திரு. முனவீராவுக்கு அனுப்பப்பட்ட அழைப்பிதழ் அரசகருமமொழியில் அச்சிடப்படாதிருந்தமையாலேயே அதை அவர் திருப்பி அனுப்பினராம்.

## அல்ஜீயர்ஸ்

அல்ஜீயர்ஸ், ஏப்ரல் 27

அல்ஜீயர்ஸின் மத்திய பகுதியில் இன்று ஒரு குண்டு வெடித்ததைத் தொடர்ந்து அம்புலன்ஸ் வாகனங்கள் அங்கு சென்ற வண்ணம் இருந்தன.

## மாநகரசபை ஆணையாளர் திரு. சண்முகம் பதவியேற்றார்

யாழ்ப்பாணம், வெள்ளி

நுவரேலியா மாநகரசபை ஆணையாளராகக் கடமையாற்றிய திரு. கே. சண்முகம் யாழ்ப்பாணமாநகரசபை ஆணையாளராகப் பதவியேற்றுள்ளார்.

யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளராகக் கடமையாற்றிய திரு. ஏ. வி. சின்னையா நுவரேலியா மாநகரசபைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## அமெரிக்கா தூண்டியதாம்!

கெய்ரோ, ஏப். 27

அல்ஜீரியாவில் நடைபெற்ற புரட்சியை அமெரிக்கா தூண்டிவிட்டதாக கெய்ரோவின் பிரபல பத்திரிகையான 'அல் அக்பர்' கூறியுள்ளது. பிரன்சு அரசாங்கத்தை வீழ்த்த இந்தப் புரட்சியை அமெரிக்கா பயன்படுத்த உத்தேசித்திருந்ததாகவும் அப்பத்திரிகை தெரிவித்தது.

## கேரளத்தில் விவசாய பல்கலைக் கழகம்

திருவனந்தபுரம் ஏப், 27

கேரளத்தில் விவசாயப் பல்கலைக்கழகம் ஒன்று நிறுவுவது பற்றி ஆராய்வதற்காக அரசாங்கம் ஒரு குழுவை நியமித்துள்ளது.


# ஒரு கரண்டிபாலின் தரத்தை எந்தத் தேநீரும் மீறமுடியாது




## இலங்கை தேநீரை அறியும்!

இலங்கை தேநீரை அறியும்! இது "மில்க்மெயிட்"டையும் அறியும்— இந்தச் சிறந்த பால் தேநீர் பருகுவதில் இன்பத்தையும் அதிகரிக்கும். உங்களுக்குச் சிறந்த—மிகவும் சுத்தமான பால் எனத்தெரிவு செய்யப்பட்டு நெஸ்லிஸ் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்டது. இது மிகவும் சிறந்த ரகமும் பணத்துக்கேற்ற நிறைந்த பெறுமதியும் கொண்டது. எப்பொழும் "மில்க்மெயிட்"பாலையே கேட்டுவாங்குங்கள்.

தேனீர் தயாரிப்பதற்கான ஐந்து பொன்னன விதிகள்:



* பக்கெட்டில் அடைக்கப்பட்ட திறமான தேயிலை
* உஷ்ண தேநீர்ப் பானை
* ஒருவருக்கு ஒரு கரண்டிப் பால். பானைக்கு ஒன்று
* சுத்தமாக கொதித்த வெந்நீர்
* 3-4 நிமிடங்களுக்கு ஊற விடுதல்.

ஆனல்! "மில்க்மெயிட்"பாலை எப்போதும் மறவாதீர்கள்.




"மில்க்மெயிட் பால்"—சிறந்த பால்



## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தர வாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணனந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி.
Advt. 91 யாழ்ப்பாணம்.



## புற்று நோய் (Cancer) மாறுதற்கு

" யோகீஸ்வர ரசம் " உபயோகியுங்கள்.

புற்று நோயை வேரறுக்கும் அரியஆயுள் வேத மருந்து. பல்லாண்டுகளாக செயல் மூலம் நிரூபிக்கப்பட்டது. இந்நோயால் பீடிக்கப்பட்டோர் நேரில் வந்து கலந்து ஆலோசிக்கவும்.

பொ. செல்லையா
ஆயுள் வேத வைத்தியர்
Advt. 110 கந்தர்மடம்.



## தேவை

யாழ்ப்பாணம் " டில்கா ஐஸ் கிரீம் கம்பெனி" யில் உணவு பரிமாறும் 'வெயிட்டர்கள்' தேவை. உடன் விண்ணப்பிக்கவும்.

மனேஜர்,
டில்கா ஐஸ் கிறீம் கம்பெனி,
202, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



## யாழ் கல்லூரி

ஜி. சி. இ. கீழ் தரம் மேல் தரம் பி. ஏ. வகுப்புகள், காலையிலும் மாலையிலும் நடைபெறும். தட்டெழுத்து, சுருக்கெழுத்து, தமிழ் ஆங்கிலம் மற்றும் கணக்கு பதவியல் முதலிய வர்த்தகப் பாடங்கள். ஆங்கிலம், கணக்கு, விஞ்ஞானம் பிரத்தியேக வகுப்புகள்.

விசாரணை:
அதிபர்

Advt 127

# சித்தங்கேணிக் கொலை வழக்கு

## முதல் எதிரிக்கு மரணதண்டனை; இருவருக்கு ஏழு வருடச் சிறை

யாழ்ப்பாணம், வெள்ளி

சித்தங்கேணிக் கொலை வழக்கில் முதல் எதிரிக்கு மரண தண்டனையும் ஒன்பதாம், பத்தாம் எதிரிகளுக்கு ஏழு வருடக் கடுழியச் சிறைத் தண்டனையும் விதித்து வடமாகாண அசைஸ் நீதியரசர் திரு. என். சின்னத்தம்பி நேற்றுத் தீர்ப்பளித்தார்.

1959-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28-ந் திகதி சட்டவிரோதமாகக் கூடியதாகவும், மார்க்கண்டு சுப்பிரமணியம் என்பவருக்குக் காயம் விளைவித்ததாகவும் மார்க்கண்டுவின் கைம்பெண் செல்லத்தைக் கொலை செய்ததாகவும் குற்றஞ் சாட்டி சங்கானை மேற்கு சித்தங்கேணியைச் சேர்ந்த என். ஐயாத்துரை, எஸ். மார்க்கண்டு, எம். அப்புத்துரை, எஸ். கந்தசாமி, எஸ். முருகேசு, ஆர். நாகமுத்து, ஏ. இளையதம்பி, எஸ். இராசையா, ஏ. சின்னத்துரை, ஏ. செல்லத்துரை, ஆர். வீரகத்தி ஆகியோர்மீது இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு. எஸ். சிவராசா விசாரணையை நடத்தினர். முதலாவது எதிரியின் சார்பில் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் திரு. ஏ. நித்தியானந்தாவின் அனுசரணையுடன் தோற்றினர். திரு. பிரின்ஸ் ராஜேந்திரா, திரு. ஏ. நித்தியானந்தா ஆகியோரின் அனுசரணையுடன் திரு. ரி. கணேசலிங்கம் 2, 3, 4, 6, 7, 9, 11-வது எதிரிகளின் சார்பில் ஆஜரானர். திரு. பி. நாகலிங்கம், திரு. கே. சேனதிராஜா ஆகியோரின் அனுசரணையுடன் திரு. வி. எஸ். பார்குமாரகுலசிங்கம், திரு. எஸ். நாகராஜாவுடன் 8-ம் எதிரியின் சார்பில் ஆஜரானர்கள். 5-வது எதிரியின் சார்பில் திரு. என். ஆர். விஜயநாதனின் அனுசரணையுடன் திரு கே. வி. எஸ். சண்முகநாதன் ஆஜரானர். 10-வது எதிரியின் சார்பில் திரு. என். ரி. சிவஞானத்தின் அனுசரணையுடன் திரு. ரி. கணேசலிங்கம் ஆஜரானர்.

விசாரணை முடிவில் சட்ட விரோதமாகக் கூடியதென்ற குற்றச்சாட்டின்கீழ் எதிரிகள் குற்றவாளிகளல்லர் என்று ஜூரிகள் தெரிவித்தனர். முதல் எதிரி என். ஐயாத்துரைமீது சாட்டப்பட்ட கொலைக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதென்று ஆறு ஜூரிகள் அபிப்பிராயம் தெரிவித்தனர். 9 வது எதிரி ஏ. சின்னத்துரைமீதும் 10 வது எதிரி ஏ. செல்லத்துரைமீதும் காயமுண்டுபண்ணியதாகச் சாட்டப்பட்ட குற்றச்சாட்டின்படி எதிரிகளிருவரும் குற்றவாளிகளென்றும் ஜூரிமார் தெரிவித்தனர்.

இதன்படி முதல் எதிரி என். ஐயாத்துரைக்கு நீதியரசர் என். சின்னத்தம்பி மரண தண்டனை விதித்தார். 9 வது எதிரி ஏ. சின்னத்துரைக்கும் 10எதிரி ஏ.செல்லத்துரைக்கும் நீதியரசர் தலா ஏழு வருடக் கடுழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

2, 3, 4, 5, 6, 7, 8, 11 வது எதிரிகள் யாவரையும் நீதியரசர் விடுதலை செய்தார்.

எப்பொழுதும் உபயோகியுங்கள்

டால்மியாஸ்

★ போட்லந்து சிமெந்து

★ ஸ்டோன்வெயர் குழாய்கள்

★ பயர் பிரிக்ஸ்

செட்டிநாட்

கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்

116, 118, கெய்சர் வீதி,

கொழும்பு.

# காலையில் மகனைக் கட்டித் தழுவி முத்தமிட்ட தாய்

## மாலையில் மகளைக் கொன்று தானும் பிணமானள்

யாழ்ப்பாணம், வெள்ளி

நான்கு மாதக் குழந்தைக்கு நஞ்சு கொடுத்துக் கொன்றதுடன் தானும் நஞ்சுண்டு தற்கொலைசெய்து கொண்ட ஒரு தாயாரின் பரிதாப சம்பவம் மண்டைதீவில் நிகழ்ந்துள்ளது.

பரமேஸ்வரி என்ற நான்கு மாதக் குழந்தையின் மரணம் பற்றியும் செல்லத்துரை என்பவரின் 32 வயதான மனைவி விஜயலட்சுமி என்பவரின் மரணம் பற்றியும் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் ஜே. பி. யு. எம். விசாரணை நடத்தினர்.

காலஞ் சென்ற விஜயலட்சுமியின் மாமி முறையான மனேன் மணி என்பவர் விசாரணையின்போது சாட்சியமளிக்கையில் சம்பவம் நடந்ததினத்தன்று மாலை விஜயலட்சுமி கையில் ஒரு தகரத்துடன் வேலிக்கு அருகில் வந்து நின்று தனது பிள்ளைக்கு நஞ்சு கொடுத்துவிட்டதாகவும் தானும் நஞ்சு குடித்ததாகவும் தெரிவித்துவிட்டு வீட்டுக்குள் ஓடினரென்றார். விஜயலட்சுமியின் சகோதரி யோகலட்சுமிக்கு இதைத் தெரிவித்துவிட்டு இருவரும் அங்கு விரைந்து சென்ற பொழுது தொட்டிலில் குழந்தை இறந்து கிடந்ததாயும் விஜயலட்சுமி அவதிப்பட்டுக்கொண்டிருந்ததையும் பார்த்ததாகவும் சில நிமிடங்களின்பின் விஜயலட்சுமி இறந்ததாகவும் அவர் கூறினர்.

### தாலிக்கொடியை வாங்கினேன்

36 வயதான சுப்பிரமணியம் முத்துலிங்கம் சாட்சியமளிக்கையில் பின்வருமாறு கூறினர்:-

காலஞ் சென்றவர் நீர்வேலியைச் சேர்ந்த செல்லத்துரை என்பவரை மணந்து கொண்டார். அவர்களுக்கு ஒன்பது வயதுள்ள ஒரு மகன் இருக்கிறர். செல்லத்துரை புத்தி சுவாதீனமற்றுவிட்டதால் விஜயலட்சுமி கணவனைவிட்டு மண்டைதீவுக்கு வந்து வாழ்ந்து வந்தார். சென்ற 3 வருடங்களாக நான் அவரை எனது ஆசைநாயகியாக வைத்திருந்தேன். இறந்த குழந்தைக்கு நான் தான் தந்தை. வீட்டைத் திருத்துவதற்காக அவளுடைய தாலிக்கொடியை ஈடுவைப்பதற்காக வாங்கினேன். மனமில்லாமல் அவர் தாலிக்கொடியைக் கொடுத்தார். பின்னர் அதைத் தருமாறு கேட்டார். நான் கொடுக்க மறுத்துவிட்டேன். அதனல் அவர் மிகவும் வேதனை யடைந்திருந்தார்.

### கட்டித்தழுவி முத்தமிட்டார்

செல்லத்துரையின் ஒன்பது வயது மகன் கனகசேகரமூர்த்தி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

நான் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு சர்பத் கடையில் வேலை செய்கிறேன். அன்று காலை எனது தாயார் நான் வேலை செய்யும் கடைக்கு வந்தார். என்னைக் கட்டித் தழுவி முத்தமிட்டார். "இனி என்னை நீ பார்க்க மாட்டாய்" என்று சொல்லி விட்டுச் சென்றர்.

பதில் சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. அருமைநாயகம் பிரேத பரிசோதனை நடத்தினர்.

கொலையும் தற்கொலையும் என்று மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

# விஞ்ஞானத்துக்குப் பூச்சிகள் சேவை

புழு, பூச்சிகள் மூலம் தான் வியாதி பரவுகிறது. பயிர் வகைநாசமடைகின்றன. இவற்றின் இனப் பெருக்கத்தைத் தடுத்து ஒழித்துக்கட்ட ஆராய்ச்சி செய்யப்படுகின்றன. இவை விஞ்ஞான வளர்ச்சிக்கும் பெரும் சேவை செய்து வருகின்றன.

புழு, பூச்சிகள் போன்ற சிற்றுயிர்கள் உலகில் நீண்டகாலமாகவே தோன்றி மறைந்து வருகின்றன. ஒவ்வொருகாலத்தில் ஒவ்வொரு வகையான பூச்சிகள் இருந்து வந்திருப்பதாக வரலாறுகள் கூறுகின்றன. இவைகள் இனப்பெருக்கத்தைத் துரிதமாக செய்வதில் நிபுணத்துவம் வாய்ந்தவை. வியாதிகள் முக்கியமாக உஷ்ணப் பிரதேசங்களில் இவை மூலம்தான் பரவுகின்றன. இதைத் தடுக்க செய்யப்பட்டு வரும் முயற்சிகள் இன்னும் நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன. பயிர்களையும் இவை பெரும் அளவுக்கு அழித்துவிடுகின்றன.

இவற்றை ஒழிப்பதற்கு விஞ்ஞான முறைகளையே மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. லெவர்குஸனிலுள்ள ஆய்வுக்கூடத்திற் பூச்சிகளை ஒழித்துக்கட்டும் ரஸாயனப் பொருள்கள் குறித்து ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆராய்ச்சிக்கு உபயோகிக்கப்படவே பலவகையான சிற்றுயிர்கள் வளர்க்கப்படுகின்றன. எந்தப் பிரதேசங்களில் எந்தச் சிற்றுயிர்கள் காணப்படுகின்றனவோ அவற்றைக் கொண்டு வந்து, அப்பிரதேச சீதோஷ்ண நிலையை ஏற்படுத்தி அதில் வளர்த்து வர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றை ஒழிப்பதற்கான வழிகளை அறியவே இவை வளர்க்கப்படுகின்றன.

---

# வசதிக் கட்டணத்தை நிறுத்தி விடுக!

கொழும்பு, வியாழன்

பாடசாலைகளில் வசதிக்கட்டணம் வசூலிப்பது நிறுத்தப்படவேண்டுமென கல்வி மந்திரி பதியுதீன் மாமூத்திடம், பண்டாரவளையில் கல்விபற்றி ஆராயும் கல்விக்குழு தெரிவித்துள்ளது.

அக் குழு தனது அறிக்கையில் மேலும் கூறுவதாவது:-

மாணவர் இவ்வித வசதிக் கட்டணத்தால் பெரிதும்பாதிக்கப்படுகின்றர்கள். பாடசாலை அதிகாரிகளும் ஆசிரியர்களும் மட்டும் பெருந்தொகையான படிப்பணம் பெறுகின்றர்கள். இந்த வசதிப்பணம் ஒழிக்கப்பட்டு, பொதுநல சபைகள், தனித்தியங்கும் பாடசாலைகளுக்குத் தேவையான பணத்தைச் சேகரிக்க அனுமதிக்கப்படவேண்டும்.

வித்தியாதிபதியின் நிர்வாகத்தின் கீழுள்ள பாடசாலைகளிலுள்ள மாணவர் விடுதிகள் நன்கு கண்காணிக்கப்பட்டு நல்ல முறையில் இலாபம் கருதாமல் செயல்பட ஆவன செய்யவேண்டும். இதற்காக ஒரு விதியை அமைத்து அந்த விதி அமுல் நடத்தப்படுகிறதா என்பதையும் கண்காணிக்க வண்டும்.

# இந்தியச் செய்திகள்

மத்திய அரசாங்கச் சிப்பந்திகள் வேலைநிறுத்தம் செய்வதைத் தடைசெய்யும் மசோதா ஒன்று அடுத்த பார்லிமெண்ட் கூட்டத்தில் கொண்டுவரப்படும் என அறிவிக்கப்பட்டது.

∴ ∴ ∴

கியூபாவின் சுதந்திரத்தை நிலைநாட்டும் விஷயத்தில் பாரதம் அந்நாட்டுக்கு உதவிபுரிய வேண்டும் என்றும் காங்கோவில் கிஸங்கா அரசாங்கத்தை அங்கீகரிக்கவேண்டும் என்றும் திரு. பூபேஷ் குப்தா (கம்யூனிஸ்ட்) லோகசபையில் கூறினர்.

∴ ∴ ∴

நாகலாந்தில் நிலைமை படிப்படியாக அபிவிருத்தியடைந்து வருவதாக லோகசபையில் அறிவிக்கப்பட்டது:

∴ ∴ ∴

பூட்டான் தலைநகருக்கும் இந்தியாவுக்குமிடையே நடைபெற்றுவரும் இணைப்பு சாலைக்கான வேலைகள் வருகி செப்டம்பர் மாதத்துக்குள் முடிந்துவிடுமாம்.

∴ ∴ ∴

சென்ற ஆண்டு நவம்பர் மாதம் முதல், கடந்த மார்ச் மாதம் வரை இந்தியாவில் 5 லட்சம் சைக்கிள்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

---

## ஞாபகார்த்த கொண்டாட்டம்

ஹிக்கடுவ ஸ்ரீசுமங்கலநாயக தேரோ, அநகாரிக தர்மபால ஆகியோரின் ஞாபகார்த்தம் வருகிற சனிக்கிழமை விகாரமகாதேவி பார்க்கில் கொண்டாடப்படும்.

---

## கலாட்டா செய்ததாக 6 பேருக்கு அபராதம்

சென்னை, ஏப்ரல் 27

தி. மு. க. ஆதரவாளர்கள் எனக் கூறப்படும் 6 நபர்களுக்கு இன்று காலை இங்குள்ள பொலிஸ் கோர்ட் ஒன்று தலா ரூ. 3 அபராதம் விதித்தது. திருவல்லிக்கேணி கடற்கரையில் தமிழ் தேசியக் கட்சி ஏற்பாடு செய்திருந்த பொதுக் கூட்டத்தில் கலாட்டா செய்ததாக இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

---

## இந்தியத்துறை படிப்புக்கு தனிவகுப்பு

### சிங்கப்பூரில் சர்வகலாசாலை ஏற்படுத்தும்

சிங்கப்பூர், எப். 27

மலாயா சர்வகலாசாலையின் சிங்கப்பூர் பிரிவில், இந்தியத்துறை படிப்புகளுக்காகத் தனி வகுப்பு ஒன்று வரும் கல்வியாண்டிலிருந்து நடத்தப்படும். மே 22ந் திகதி புதிய கல்வி ஆண்டு தொடங்குகிறது.

முன்னர் இங்கு இந்தியத்துறை படிப்புகளுக்காக தனியாக ஒரு பிரிவு இருந்து வந்தது. ஆனல் 1959-ல் சர்வகலாசாலை இரண்டாகப் பிரிக்கப்பட்டபோது, இந்தப் பிரிவு கோலாலம்பூருக்கு மாற்றப்பட்டது.

---

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு வழங்கினல், ஜனத்தொகை அதிகரிப்பதைப்பற்றி கவலைப்படுவதற்கு ஏதுவுமில்லை. இயற்கை அன்னைக்குத் தெரியாதா இந்த விஷயமெல்லாம்?

ப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.